சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : MCOP:68/2020

2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26ம் நாள் எதிர்மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. T.சண்முகபிரியா கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் டாக்டர். ஞானசேகரன் (RW2) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

26.04.2024

1) நான் தற்சமயம் அருப்புக்கோட்டை அமர் மருத்துவனையில் அறுவைசிகிச்சை நிபுணராக பணிசெய்கிறேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ 2 ஆவணம் எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்டது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கடந்த 02.10.2020 அன்று 44 வயது மதிக்கதக்க இந்திரா என்பவரை கால்பகுதியில் காயம் ஏற்பட்டு அழுகியநிலையில் எங்கள் மருத்துவமனைக்கு கொண்டுவந்தார்கள். அவர் 24.08.2020 அன்று காலை 7 மணியளவில் நான்குசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்ததால் வலதுகாலில் வெளிப்பக்கத்தில் காயம் ஏற்பட்டு தையல் போடப்பட்டிருந்தது. என்னிடம் வரும்போது 5 நாட்கள் ஆகியிருந்து. காய்ச்சல் இருந்தது. மோசமான நிலையில் இருந்தார். 27.08.2020 அன்று அழுகியநிலையில் உள்ள சதைகளை அறுவைசிகிச்சை மூலம் அகற்றி சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்தபோதிலும் காயத்தில் சீல் வைப்பது கட்டுப்பாட்டிற்கு வரவில்லை.

2) அதிகமாக தொடை வரை பரவிவிட்டது. எனவே அவருக்கு தொடை

பகுதி வரை அறுவைசிகிச்சை செய்து காலை அகற்றுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அப்பொழுதே (செப்டி சீமியா) விஷதன்மை ரத்ததில் பரவியிருந்தது. அவர்கள் காலை அகற்றுவதற்கு அவர் சம்மதம் தெரிவிக்கவில்லை. அவரை மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்ல பரிந்துரை செய்தேன். அவர்கள் அந்த மருத்துவமனைக்கு செல்லவும் மறுத்துவிட்டார். 13.09.2020 அன்று (செப்டிக்சாக்) மோசமான நிலைக்கு சென்றுவிட்டார். அன்று வேறு வழியில்லாமல் அழுகிய கால் அகற்றப்பட்டது. தொடர்மருத்துவசிகிச்சை செய்ய அறிவுறுத்தபட்டபோதிலும் அதற்கு எதிராக நோயாளியை வீட்டிற்கு கொண்டு சென்றுவிட்டார்கள்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3) விபத்தில் காயமுற்று இறந்துபோனவர் எங்கள் மருத்துவமனையில் 26.08.2020 அன்று சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படுவது 24.08.2020 அன்று என்றால் சரிதான். விபத்து நடந்த 2 நாட்கள் கழித்து எங்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ 7 ஆவணம் பில்கள் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக செலுத்தப்பட்ட பில்கள் என்றால் சரிதான். இறந்துபோனவருக்கு காலில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக தான் Necrotising Fascitis என்ற வியாதி ஏற்பட்டுள்ளது அதன் காரணமாக தான் அவர் கால்கள் அழுகி நீக்கப்பட்டது. எங்கள் மருத்துவமனையிலிருந்து செல்லுமபோது மோசமான நிலையில் தான் காயமுற்றவர் சென்றார்.

மறுவிசாரணை இல்லை.